පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක: 222

ආයතනයේ නම : පරිවාස හා ළමාරක්ෂක සේවා දෙපාර්තමේන්තුව
පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුවට ඉදිරිපත් කිරීම

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்** : 222

நிறுவனத்தின் பெயர் : நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன்கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary series No:222

Name of the institution : Department of Probation and Child Care Services

Submission of observations of Hon.Minister and steps taken with regard to the reports tabled by the committee on public Accounts in terms of Standing Order No. 119(4)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. – 222

நிறுவனத்தின் பெயர் - நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்

| குழு இனங்கண்டுள்ள குறைபாடுகள் | குறைபாடுகளை சீராக்கல் செய்துகொள்வதற்காக நிறுவனம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை |
|---|---|
| i. உள்ளகக் கணக்காய்வு அலகை தாபித்தல்<br>நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் 2023 யூன் 25 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளகக் கணக்காய்வு அலகை தாபித்து அறிக்கையிடல் | நி.பி. 133 (ஆ) இற்கமைய திணைக்களத்தின் பணிகளை உள்ளடக்கியதாக அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலகு மூலம் உள்ளகக் கணக்காய்வு . நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br>இதற்கு மேலதிகமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டு குழுக் கூட்டங்கள் 2 உம், 2024 ஆம் ஆண்டு குழுக் கூட்டங்கள் 4 உம், இந்த ஆண்டில் குழுக் கூட்டங்கள் 02 உம் நடாத்தப்பட்டுள்ளன. |
| ii. UNCRC தரவு முறைமையைப் பயன்படுத்திக் கொள்ளாமை<br>மதியுரைக் கட்டணம் உட்பட ரூபா 2,350.000 ஆன தொகை செலவிடப்பட்டு ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தை அமுல்படுத்துவது தொடர்பாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் குழுவுக்கு சமகால மற்றும் சரியான தகவல்களை சமர்ப்பிக்க வேண்டியதன் அவசியத்தன்மைக்காக 2018 இல் திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்ட UNCRC தரவு முறைமை பயன்படுத்தப்படாமை. | 2023.10.30 ஆம் திகதி open mind solutions (Pvt) Ltd நிறுவனத்துடன் தரவு முறைமையை தாபிப்பதற்கு (Host) உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ளது. 2018 இல் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்ட UNCRC தரவு முறைமைக்கு சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கு அமைய சமர்ப்பிக்க வேண்டிய பருவகால அறிக்கையை தயார் செய்யும் போது தகவல்களை சமர்ப்பிக்க வேண்டிய சகல நிறுவனங்களினதும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தரவுகளை உட்புகுத்துவது தொடர்பில் பயிற்சி அளிக்கப்பட்டது.<br>UNCRC தரவு முறைமையை தயார் செய்வதற்காக தயார் செய்யப்பட்ட கணினி செயலி மூலம் தரவுகளை தரவேற்றம் செய்யும் போது நிறுவனம் எதிர்கொண்ட நடைமுறைசார் மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள் பற்றி ஆராய்ந்து மேற்படி கணினி செயலி தொடர்பான சிபாரிசுகள் மற்றும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு 2024.08.20 ஆம் திகதி ஒரு குழு நியமனம் செய்யப்பட்டது. மேற்படி குழு 2024.10.23 ஆம் திகதி |

| | |
|---|---|
| | ஒன்றுகூடியதுடன் UNCRC தரவு முறைமையை தயார் செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள கணினி செயலியின் குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொண்டு உபயோகிக்க பொருத்தமானவாறு அதனை மீளத் தயாரிக்க எவ்வளவு நிதி செலவாகும்? இது நிதிசார் அடிப்படையில் பயன்வாய்ந்ததா என்பது பற்றி கண்டறிய முறையான ஆய்வொன்றை நடாத்த வேண்டும் என்பதுடன், அதற்காக பல்கலைக் கழகமொன்றின் கணினி நிறுவனம் ஒன்றின் மூலம் ஆலோசனை சேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் குழுவில் தீர்மானிக்கப்பட்டது. எனினும் இதற்கும் மீண்டும் செலவினத்தை தாங்கிக் கொள்வது பயன்வாய்ந்ததாக இருக்குமா என்ற சிக்கலான நிலை காணப்படுகின்றது. இது தொடர்பில் தற்போது புதிய அரசின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள டிஜிரல் பொருளாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுக்கு தொழில்நுட்ப உதவி பெற்றுக் கொள்வதற்காக கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. (இணைப்பு 01) இது பற்றி 2025.07.03 ஆம் திகதி டிஜிரல் பொருளாதார அமைச்சின் அலுவலர்களுடன் கலந்துரையாடப்பட்டதுடன், இதன் போது திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு மேற்படி தரவு முறைமை பற்றிய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளத் தேவையான அலுவலர்களின் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று இணக்கம் தெரிவிக்கப்பட்டது. அதற்கமைய இது தொடர்பாக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சினை டிஜிரல்மயப்படுத்துவதற்கு இசைவாக UNCRC தரவு முறைமையை பயன்படுத்தக்கூடிய மட்டத்திற்கு அபிவிருத்தி செய்யத் தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திணைக்களம் பிரேரணைகளை சமர்ப்பித்துள்ளது. |
| iii. சிறுவர்கள் கட்டாயமாக பாடசாலைகளுக்கு வருகைதர வேண்டியதன் சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்கு மாகாண மட்டத்தில் மற்றும் தேசிய மட்டத்தில் தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.<br>• கட்டாயக் கல்வி பெற | I. கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 1963/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய ஒவ்வொரு பாடசாலையிலும் பாடசாலை கண்காணிப்புக் குழுக்களை தாபிப்பதற்கு மாகாண கல்விப் பணிப்பாளரினால் நியமனம் |

| | |
|---|---|
| வேண்டிய சிறுவர்கள் பாடசாலைக்கு வருகை தராமை பற்றி கல்வி அமைச்சினால் இற்றைப்படுத்தப்பட்ட தரவுக் பேணிவருவதுடன், அது தொடர்பான நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் சிறுவர் கல்வியை உறுதி செய்வது பற்றிய தேசிய கொள்கையை தயார் செய்தல் வேண்டும் என்றும் குழு அங்கீகரித்தது. | செய்யப்படுகின்ற உறுப்பினர்களிலிருந்து பிரதேச செயலாளரை பிரதிநிதித்துவம் செய்கின்ற சிரேஷ்ட அலுவலர் ஒருவர் குழுவில் இணைக்கப்பட்டுள்ளார். பிரதேச செயலாளர் பெயரிடுகின்ற அலுவலராக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் / சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளரை பெயரிடுமாறு அறிவித்து பிரதேச செயலாளர்களுக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேற்படி வர்த்தமானி அறிவித்தலில் குறித்த அலுவலர்களின் பதவியை உட்புகுத்துவதற்கு கலந்துரையாடப்பட்ட போதிலும் அதற்கு நீண்டதொரு செயன்முறையை பின்பற்ற வேண்டியிருப்பதாக கல்வி அமைச்சு தொிவித்தது. பாடசாலை செல்லாத சிறுவர்களை பாடசாலைமயப்படுத்துவது கல்வி அமைச்சின் நேரடியான பொறுப்பாகும் என்று 2023.09.19 ஆம் திகதி கல்வி அமைச்சின் அலுவலர்களின் பங்கேட்புடன் நடைபெற்ற கூட்டத்தில் தொிவிக்கப்பட்டது. மேற்படி கூட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கல்வி அமைச்சினால் 2023.10.02 ஆம் திகதி ஒரு கடிதம் வெளியிடப்பட்டது. அதற்கமைய, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் / சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளரினால் பாடசாலை செல்லாதவர்கள் என்று இனங்காணப்பட்டுள்ள சிறுவர்கள் பாடசாலை கண்காணிப்புக் குழுவிடம் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் மேற்படி சிறுவர்களை பாடசாலைமயப்படுத்துவதும், அதன் பின்னர் தகவல்களை சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் / சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதும் அவசியமாகும். அவ்வாறு அறிவிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பாக இத்திணைக்களத்தின் அலுவலர்கள் |

| | |
|---|---|
| | பின்னாய்வை மேற்கொள்வார்கள்.<br>II. கல்வி அமைச்சின் செயலாளருடன் 2025.05.16 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது. இதன் போது இதன் போது சிறுவர்களின் சிக்கல்களை பாடசாலையினுள் வெளிப்படுத்தும் முறையியலை தயார் செய்வதற்கு பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் அலகுகளை கட்டியெழுப்பும் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை தயார் செய்து வருவதுடன், அதன் குழு உறுப்பினர்களாக இத்திணைக்களத்தின் பிரதிநிதித்துவமும் வழங்கப்பட்டுள்ளது. |
| iv. சட்ட அலுவலர் பதவிக்கு முழு நேர அடிப்படையில் அலுவலர் ஒருவரை நியமனம் செய்துகொள்ளல் | வெற்றிடத்தை நிரப்புவது தொடர்பான வர்த்தமானப் பத்திரிகை 2025.06.27 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளதுடன், மேற்படி அறிவித்தலுக்கு அமைய விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி 2025.07.27 ஆம் திகதியாகும். நேர்முகப் பரீட்சைக் குழுவை நியமனம் செய்வதற்காக தற்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. (இணைப்பு 2) |
| v. சிறுவர்கள் பற்றிய சிக்கல்கள் / முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்க நடவடிக்கைக் குழுக்களை அமுல்படுத்தும் முறையியலை தயார் செய்தல் | • மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் கீழ் நன்னடத்தை அலுவலர்கள் சேவையாற்றி வருகின்றார்கள் என்பதுடன், அவர்களின் நிரந்தர சேவை நிலையம் நன்னடத்தை அலுவலகம் ஆகும். எனினும் சிறுவர்கள் தொடர்பான சிக்கல்கள் பற்றிக் கலந்துரையாடும் குழு கட்டமைப்பான சிறுவர் உரிமைகள் பற்றிய பிரதேச, மாவட்ட மற்றும் மாகாணக் குழுக்களுக்கு மேற்படி அலுவலர்களின் பங்களிப்பும், பங்கேற்பும் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.<br>• பாதுகாப்பற் மற்றும் அபாயகரமான நிலையிலுள்ள சிறுவர்களை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் இனங்காண்பதற்கு சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் |

| | | |
|---|---|---|
| | | / சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்கள் பல்வேறு முறையியல்கள் ஊடாக பிரதேச செயலகத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவின் சகல அலுவலர்களினதும் கூட்டு அணுகுமுறையின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்வார்கள்.<br>சிறுவர்கள் தொடர்பான சிக்கல்கள் அறிக்கையிடப்படுவதை தேசிய கட்டமைப்பொன்றாக பேணிவருவது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விடயப்பரப்புக்கு உரித்தானதாகும். |
| vi. | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நிறுவனம்சார் தரவு முறைமையை தயார் செய்தல் | pcc/2/2/10 ஆம் இலக்க 2023.11.13 ஆம் திகதிய கடிதம் மூலம் தரவு முறைமை தொடர்பான அறிக்கை அரசாங்க கணக்குகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>தற்போதைய முன்னேற்றம் பற்றி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் கிடைத்துள்ள அறிக்கை (இணைப்பு 03) |
| vii. | சிறுவர்களை தத்தெடுத்தல் கட்டளைச் சட்டம் உள்ளிட்ட சட்டங்களை காலத்தின் தேவைகளுக்குப் பொருத்தமானவாறு திருத்தம் செய்யும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தல். | சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் பற்றிய கட்டளைச் சட்டம் வரைவு செய்து முடிக்கப்பட்டு நீதி அமைச்சிடம் இறுதி வரைவு கையளிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டத் திருத்தங்கள் நீதி அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கு திணைக்களம் குழு அங்கத்தவர் ஒருவராக இதில் பங்கேட்கும்.<br>எவ்வாறாயினும் சிறுவர் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு உரிய குழு மூலம் இறுதிப்படுத்தப்பட்டுள்ள குறித்த வரைவு தற்போது நீதி அமைச்சிடம் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் சிறுவர்களை தத்தெடுத்தல் கட்டளைச் சட்டத்துக்கான திருத்தங்களின் நடவடிக்கைகள் இதுவரை நிறைவு செய்யப்படவில்லை. எனவே இது தொடர்பான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு நீதி அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. சிறுவர் சட்டம் மற்றும் சிறுவர்களை தத்தெடுத்தல் கட்டளைச் சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருப்பது மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் |

| | |
|---|---|
| | கீழாகும் என்பதுடன், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் குறித்த சட்டங்களை வரைவு செய்யும் போது தொழில்நுட்பப் பங்களிப்பை மாத்திரம் வழங்குகின்றது. |
| 02. பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகள் தேசிய நிலையத்தை பேணிவருதல். | ஏடிபி உதவியின் கீழ் மேல் மாகாண சபையினால் பரத்த சிறுவர் அபிவிருத்தி நிலையத்திலன் மகளிர் விடுதி புதுப்பிக்கப்பட்ட போதிலும், கொடுப்பனவுகள் தொடர்பிலான சிக்கல் காரணமாக மேற்படி பணிகள் இடைநடுவே தடைப்பட்டுள்ளன. குறித்த சிக்கல் தீர்த்துக் கொள்ளப்பட்டவுடன் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்ய முடியும். எவ்வாறாயினும் மேற்படி புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்ட போதும் ஒட்டுமொத்த கட்டிடத்தையும் புதுப்பிக்க வேண்டிய நிலை காணப்படுவதனால் சிறுவர்களை தடுத்துவைத்திருப்பதற்கு உகந்த நிலையில் இல்லை.<br>அதற்கமைய பரத்த பயிற்சி மற்றும் ஆலோசனை நிலையத்தை முழுமையாக புதுப்பித்து சிறுவர்களை தடுத்துவைக்கக்கூடிய மட்டத்திற்குக் கொண்டுவருவதற்கு குறித்த கருத்திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், ஏற்பாடுகள் கிடைத்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. |
| 03. மாகாண நடவடிக்கைக் குழுக்களை நடாத்தல். | 2023 யூலை 04 திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் உத்தரவுக்கு அமைய 2023 ஆம் ஆண்டு மாகாண மற்றும் மாவட்ட நடவடிக்கைக் குழுக்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டு முறையாக குழுக்களை நடாத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டதுடன், குழுக்களை நடாத்துவது பற்றிய அறிக்கை இணைப்பு 04 மூலம் தரப்பட்டுள்ளது.<br>இந்தக் குழுக்களை நடாத்துவது தொடர்பான நிகழ்ச்சிநிரல் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் |

| | |
|---|---|
| | அமைச்சினால் 2018.01.10 ஆம் திகதியைக் கொண்டதாக 01/18 சுற்றறிக்கை மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மாகாண குழுக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.<br>சிறுவர் உரிமைகள் பற்றிய நடவடிக்கைக் குழு கிராமிய, பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் அமுலில் உள்ளது. கிராமியக் குழு மூலம் சிறுவர்கள் தொடர்பான சிக்கல்கள் இனங்காணப்படும் போது மேற்படி குழுக்களின் மட்டத்தில் தலையீடு செய்யக்கூடிய சிக்கல்களைத் தீர்த்துவைப்பதும், தீர்த்து வைப்பது கடினமாக உள்ள சிக்கல்களை பிரதேச குழுவிடம் சமர்ப்பித்து தீர்வு பெற்றுக் கொள்வதும் இடம்பெறும். பிரதேச மட்டத்தில் தீர்க்கப்படாத சிக்கல்கள் மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டம் வரை சமர்ப்பிக்கப்படும். |

....................................

சரோஜா சாவித்திரி போல்ராஜ்
கௌரவ அமைச்சர்
மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு

**Mrs. Saroja Savithri Paulraj**
Hon. Minister of Women and Child Affairs
Ministry of Women and Child Affairs
6th Floor, Sethsiripaya, 2nd Stage,
Battaramulla.